DINATHANTHI 24 AUG 09



திருப்பூரில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக துணை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மரக்கன்றை நட்டு தண்ணீர் ஊற்றியபோது எடுத்தபடம். அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி, திருப்பூர் மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தி, ஈஷா அமைப்பு நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ், மேயர் செல்வராஜ், கோவிந்தசாமி எம்.எல்.ஏ, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கதலைவர் சக்திவேல், நடிகர் பிரகாஷ் ராஜ், நடிகை ஸ்ரேயா ஆகியோர் அருகில் உள்ளனர்.

### திருப்பூரில், ஈஷா அமைப்பு சார்பில்

# 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா

## துணை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

திருப்பூர், ஆக.24-
திருப்பூரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழாவை, தமிழக துணை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு மரக்கன்றை நட்டு தொடங்கி வைத்தார்.

### ஈஷா அமைப்பு

ஈஷா அமைப்பின் ஒரு அங்கமான பசுமைக்கரங்கள் அமைப்பு, சுற்றுச்சூழல் சீரழிவால் பாதிக்கப்பட்ட நகரங்களை தேர்வு செய்து, அங்கு மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி உள்ளது. இந்த திட்டத்தின் கீழ், திருப்பூர் நகரம் தேர்வு செய்யப்பட்டு நகர மக்களின் ஒத்துழைப்புடன் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு 3 ஆண்டு பராமரிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன்படி திருப்பூர் நகரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்ட தொடக்க விழா திருப்பூர் டவுன்ஹால் மைதானத்தில் நேற்று காலை 8 மணிக்கு நடந்தது. விழாவுக்கு சத்குரு ஜக்கி வாசுதேவ் தலைமை தாங்கினார். உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, ஊரக தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தகவல் தொழில்நுட்ப அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### மு.க.ஸ்டாலின்

தமிழக துணை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், மரக்கன்று நட்டு விழாவை தொடங்கி வைத்தார். ஈஷா அமைப்பு நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் இரண்டாவது மரக்கன்றை நட்டு வைத்தார். அப்போது நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகை ஸ்ரேயா ஆகியோர் உடன் இருந்தனர்.

விழாவில் திருப்பூர் மாநகராட்சி மேயர் செல்வராஜ், துணை மேயர் செந்தில்குமார், திருப்பூர் மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தி, மாவட்ட வருவாய் அதிகாரி முரளிதரன், மாநகராட்சி கமிஷனர் ஜெயலட்சுமி, கோவிந்தசாமி எம்.எல்.ஏ., திருப்பூர் மாநகர தி.மு.க. துணை செயலாளர் டி.கே.டி.மு.நாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

துணை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், விழா குறித்து நிருபர்களிடம் கூறும்போது, 'ஈஷா அமைப்பு பல்வேறு சமூக நல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. திருப்பூரில் ஈஷா அமைப்பு சார்பில் மரக்கன்றுகள் நட்டு பராமரித்து சுற்றுச்சூழலை மேம்படுத்துவது பாராட்டுக்குரியது' என்றார்.